



# அகர முதல

Aagaramuthalaa | மின்னிதழ் | www.Aagaramuthalaa.com


விளம்பர தொடர்புக்கு
9597887847 / 8870884969

செவ்வாய், ஜூலை 20.2021 | கடலூர் & மயிலாடுதுறை | மலர்:07 இதழ்:03

# வெளியானது 12 ஆம் வகுப்பு மதிப்பெண் பட்டியல்

## முதல்முறையாக தசம முறையில் மதிப்பெண் வெளியீடு-அமைச்சர் அன்பில் மகேஷ்




பல்வேறு எதிர்பார்ப்புகள் ஆலோசனைகளுக்கு மத்தியில் இன்று சுமார் 8 லட்சம் மாணவர்களின் 12 ஆம் வகுப்பு மதிப்பெண் பட்டியல் வெளியாகியுள்ளது. தமிழகத்தில் 12 ஆம் வகுப்பு தேர்வு ரத்து செய்யப்பட்டதையடுத்து 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு எதன் அடிப்படையில் மதிப்பெண் வழங்குவது என்பது தொடர்பான அறிவிப்பு தமிழக பள்ளிக்கல்வித்துறை சார்பில் அண்மையில் வெளியாகி இருந்தது.

இந்நிலையில், தமிழகத்தில் 12 ஆம் வகுப்பு தேர்வு முடிவுகளை நேற்று காலை 11 மணிக்கு தமிழ்நாடு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் வெளியிட்டார். மாணவர்கள் அவர்களது பதிவு எண் மற்றும் பிறந்த தேதியைப் பதிவு செய்து மதிப்பெண்களுடன் கூடிய முடிவுகளை **www.tnresults.nic.in, www.dge1.tn.nic.in, dge2.tn.nic.in,dge.tn.gov.in** என்ற தளங்களில் அறியலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் பள்ளியில் குறிப்பிட்டுள்ள கைப்பேசி எண்ணுக்கு மதிப்பெண்கள் குறுஞ்செய்தியாக அனுப்பப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. **www.dge.tn.gov.in, www.dge.tn.nic.in** இந்த தளத்தில் ஜூலை 22 முதல் மதிப்பெண் பட்டியலைப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது 12 ஆம் வகுப்பு மாணவர்களின் மதிப்பெண்கள் முதல்முறையாக தசம எண்களிலும் கணக்கிடப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## குடியரசுத் தலைவர் ராம் நாத் கோவிந்துடன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சந்திப்பு.!



டெல்லியில் குடியரசுத் தலைவரை சந்தித்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், சட்டப்பேரவை நூறாண்டு விழாவுக்குத் தலைமைதாங்கி, கலைஞரின் திருவுருவப்படத்தைத் திறந்துவைக்க அழைப்புவிடுத்துள்ளார். டெல்லி சென்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், குடியரசுத்தலைவர் மாளிகையில் ராமநாத் கோவிந்தை சந்தித்தார். இதைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய முதலமைச்சர். சட்டப்பேரவை நூற்றாண்டு விழாவுக்குத் தலைமைதாங்கிட, குடியரசுத் தலைவருக்கு அழைப்புவிடுத்ததாகவும், அவரும் கோரிக்கையை ஏற்றதாகவும் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார். தமிழ்நாட்டில் பள்ளி, கல்லூரிகளை இப்போது திறக்க முடியாத சூழ்நிலை உள்ளது என்றும், பெற்றோர்கள், அதிகாரிகளுடன் ஆலோசித்து அது பற்றி முடிவெடுக்கப்படும் என்றும் முதலமைச்சர் பதிலளித்தார். மேகதாது விவகாரத்தில் கர்நாடகத்துடன் பேச்சுவார்த்தைக்கு இடமில்லை என தெரிவித்த மு.க.ஸ்டாலின், மேகதாது விவகாரத்தில் சம்மந்தப்பட்ட கேரளம், புதுச்சேரி அரசுகளுடன் கலந்தாலோசிக்க அவசியமில்லை என பதிலளித்தார்.

## 40 கோடி மக்கள் பாகுபலி-பிரதமர் மோடி



நாடாளுமன்றத்தின் மழைக்கால கூட்டத்தொடர் நேற்று தொடங்கி ஆகஸ்ட் 13 ஆம் தேதி வரை நடைபெற இருக்கிறது. நேற்று காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெறும் கூட்டத்தொடரில் ஜீரோ ஹவர், கேள்வி நேரம் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. கரோனா அச்சுறுத்தல் காரணமாக மழைக்கால கூட்டத்தொடரில் பார்வையாளர்களுக்கு அனுமதி இல்லை என முன்னரே அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த கூட்டத்தொடரில் தடுப்பூசி ஒதுக்கீடு, பெட்ரோல் விலை உயர்வு, விவசாயிகள் போராட்டம் உள்ளிட்ட பிரச்சனைகள் குறித்து எதிர்க்கட்சிகள் கேள்வி எழுப்ப திட்டமிட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன. இந்த மழைக்கால கூட்டத்தொடரானது மொத்தமாக 19 அமர்வுகளாக நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. அதில் மத்திய அரசு 31 சட்ட மசோதாக்களை நிறைவேற்ற முடிவு செய்துள்ளது. இந்நிலையில், நாடாளுமன்ற அலுவலகத்தின் முன் பிரதமர் மோடி செய்தியாளர்களைச் சந்தித்தார். அவர் பேசுகையில், அனைத்து முக்கிய விவகாரங்கள் குறித்தும் விவாதம் நடத்த மத்திய அரசு தயாராக உள்ளது. நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் ஆக்கப்பூர்வமான விவாதம் நடத்த ஒத்துழைப்பு தர வேண்டும். மத்திய அரசு கூறும் விளக்கங்களை எதிர்க்கட்சிகள் கேட்டுக்கொள்ள வேண்டும். கரோனா தடுப்பூசி செலுத்திக்கொண்டு பாகுபலி போல வலுவானவராக அனைவரும் உருவாக வேண்டும். கரோனா தொற்றுக்கு எதிரான போராட்டத்தில் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்றார்.




சட்டமன்ற நிகழ்வுகளை முழுமையாக நேரடி ஒளிபரப்பு செய்ய அரசு ஆவன செய்ய வேண்டும் என மக்கள் நீதி மய்யம் கட்சி தலைவர் கமல்ஹாசன் வலியுறுத்தியிருக்கிறார். இது குறித்த அறிக்கையில், சட்டமன்ற நிகழ்வுகளை நேரடி ஒளிபரப்பு செய்வது தங்களைப் பாதிக்கும் பிரச்னைகளில் எம்எல்ஏக்களின் கருத்து என்னவாக இருக்கிறதென்பதைப் பொதுமக்கள் அறிந்து கொள்ள உதவியாக இருப்பதுடன், பத்திரிகை மற்றும் ஊடகங்களுக்கும் பயனுள்ளதாக இருக்கும் எனத் தெரிவித்துள்ளார்.மேலும், இந்த பட்ஜெட் தொடரிலேயே நேரடி ஒளிபரப்பு செய்ய வேண்டுமென கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்த ஆண்டு இறுதிக்குள் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் நடைபெறும் என அமைச்சர் கே. என். நேரு தெரிவித்துள்ளார். சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனை தெரிவித்தார். மேலும் செப்டம்பர் 15 ம் தேதிக்குள் ஊரக உள்ளாட்சி தேர்தல் நடைபெறும் என முதல்வர் ஏற்கனவே அறிவித்துள்ளார். சில இடங்களில் உள்ளாட்சி அமைப்புகளில் சீர்திருத்தம் மகளிர்க்கு இடஒதுக்கீடு போன்ற குற்றச்சாட்டுகள் இருப்பதால் அவற்றை கலைந்து இந்த ஆண்டு இறுதிக்குள் நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் நடைபெறும் என்றும் தெரிவித்தார்.




## சசிகலாவால் அதிமுகவை வீழ்த்த முடியாது – எடப்பாடி பழனிசாமி



சேலம் ஜலகண்டாபுரம் பகுதியில் அதிமுக இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி பழனிசாமி செய்தியாளர்களை சந்தித்தார், அப்போது பேசிய அவர், திமுக ஆட்சி அமைந்ததும் நீட் தேர்வு ரத்து செய்யப்படும் என வாக்குறுதி அளித்துவிட்டு இதற்போது நடைமுறைப்படுத்தாமல் திமுக அரசு மக்களை திட்டமிட்டு ஏமாற்றி வருவதாக குற்றம் சாட்டினார். அத்துடன் உள்ளாட்சித் தேர்தலை சந்திக்க அதிமுக தயாராக இருப்பதாக கூறினார்.தமிழகத்தில் 50 ஆண்டுகாலம் அதிமுக சட்டப்போராட்டம் நடத்தி, கர்நாடகா தண்ணீரை தேக்கவும், தடுக்கவும் கூடாது என்று உச்சநீதிமன்றத்திடம் இருந்து தீர்ப்பை பெற்றுத் தந்தது. தற்போது கர்நாடக அரசு வேண்டுமென்றே தமிழகத்திற்கு வரும் தண்ணீர் தடுப்பதற்காக மேகதாது அணை கட்டப்படும் என்று அறிவிப்பை வெளியிட்டுள்ளது. இது கண்டிக்கத்தக்கது எனவும் மேகதாது அணை கட்டுவது மூலமாக டெல்டா மாவட்டங்கள் பாலைவனமாக மாறும் என்று குறிப்பிட்டார்.சசிகலா குறித்த செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அவர், தவறான செய்திகளை சசிகலா பரப்பி வருவதாக சாடினார்.அத்துடன் எவ்வளவு தவறான கருத்துகளை பரப்பினாலும், சசிகலாவால் அதிமுகவை வீழ்த்த முடியாது என தெரிவித்தார்.

## முன்னாள் அமைச்சர் எஸ். பி. வேலுமணிக்கு எதிரான முறைகேடு புகார்

### விசாரிக்க நீதிமன்றம் உத்தரவு



முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணிக்கு எதிரான முறைகேடு புகாரில்இ முழு விசாரணை நடத்தி, நடவடிக்கை எடுக்குமாறு, தமிழ்நாடு அரசுக்கு சென்னை உயர் நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.கடந்த ஆட்சியில் உள்ளாட்சித்துறை அமைச்சராக பொறுப்பு வகித்த எஸ்.பி. வேலு மணிக்கு எதிரான டெண்டர் முறைகேடு வழக்கு, சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி அமர்வில் விசாரணைக்கு வந்தது.எஸ்.பி.வேலுமணி அமைச்சராக இருந்த காலகட்டத்தில், கணக்கு தணிக்கை அறிக்கையில் முறைகேடுகள் நடந்ததாக தகவல் வெளியாகியிருப்பதாக தமிழ்நாடு அரசு அப்போது தெரிவித்தது. விசாரணைக்குப்பின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படும் எனவும் அரசு தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டது. இதனையடுத்து, முழுமையாக விசாரணை நடத்தி முறைகேடுகளில் சம்பந்தப் பட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு தமிழ்நாடு அரசுக்கு அறிவுறுத்திய சென்னை உயர்நீதிமன்றம், எஸ்.பி.வேலுமணி மீதான முறைகேடு வழக்கை அடுத்த மாதம் 2வது வாரத்திற்கும் ஒத்தி வைத்தது.

# விஜய் சொகுசு கார் வழக்கு: திடீர் திருப்பம்




வெளிநாட்டுச் சொகுசு காருக்கு நுழைவு வரி வசூலிக்கத் தடை கோரிய வழக்கில் அபராதம் விதித்த உத்தரவை எதிர்த்து நடிகர் விஜய் தொடர்ந்த மேல்முறையீடு வழக்கை வரி தொடர்பான மேல் முறையீட்டு வழக்கை விசாரிக்கும் அமர்வுக்கு மாற்ற பதிவுத்துறைக்குச் சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. தமிழ் திரைப்பட நடிகர் விஜய், கடந்த 2012 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் இருந்து ரோல்ஸ் ராய்ஸ் கோஸ்ட் சொகுசு காரை இறக்குமதி செய்தார். இந்த காரை பதிவு செய்ய வட்டார போக்குவரத்து அலுவலகத்தை அணுகிய போது, வாகனத்திற்கு நுழைவு வரி செலுத்த உத்தரவிடப்பட்டது. இதையடுத்து, காரை இறக்குமதி செய்த போது, இறக்குமதி வரி செலுத்தியுள்ள நிலையில், நுழைவு வரி விதிக்க தடை விதிக்க வேண்டும் எனவும், இது தொடர்பாக தமிழ்நாடு அரசின் வணிக வரித் துறை உதவி ஆணையர் பிறப்பித்த உத்தரவிற்குத் தடை விதிக்க கோரியும் நடிகர் விஜய் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கைத் தள்ளுபடி செய்த சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி எஸ்.எம்.சுப்ரமணியம், நடிகர்கள் முறையாக உரிய நேரத்தில் வரி செலுத்த வேண்டும் என்றும், அவர்கள் உண்மையான ஹீரோக்களாக இருக்க வேண்டுமே தவிர ரீல் ஹீரோக்களாக இருக்கக் கூடாது என்றும் கருத்து தெரிவித்திருந்தார். மேலும், நடிகர் விஜய் உரிய வரியைச் செலுத்த வேண்டும். விஜய்க்கு ஒரு லட்சம் ரூபாய் அபராதம் விதித்த நீதிபதி, அதை முதலமைச்சர் கரோனா நிவாரண நிதிக்கு இரண்டு வாரத்தில் வழங்க வேண்டும் எனவும் உத்தரவிட்டிருந்தார். தனி நீதிபதியின் இந்த உத்தரவை எதிர்த்து நடிகர் விஜய் தரப்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யப்பட்டுள்ளது. அதில் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கார்களுக்கு நுழைவு வரி விலக்கு அளிக்கக் கோரி பல வழக்குகள் உயர் நீதிமன்றத்தில் நிலுவையிலிருந்ததால் விலக்கு கோரியதாகவும் இந்தியாவுக்குள் ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கு மதிப்புக்கூட்டப்பட்ட வரி செலுத்தாமல் காரை கொண்டு செல்லவே நுழைவு வரி விதிக்கப்படுகிறது என்பதாலும் விலக்கு கேட்டதாக விஜய் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது. தனி நீதிபதி விதித்த அபராதத்தை ரத்து செய்ய வேண்டுமெனவும், தன்னை பற்றி தீர்ப்பில் குறிப்பிட்டுள்ள விமர்சனங்களை நீக்க வேண்டுமெனவும் மனுவில் கூறியுள்ளார் . மேலும் தனி நீதிபதியின் தீர்ப்பு நகல் இல்லாமல், இந்த மேல்முறையீட்டு மனுவை எண்ணிட்டு விசாரணைக்குப் பட்டியலிட பதிவுத்துறைக்கு உத்தரவிடக் கோரியும் விஜய் தரப்பில் கூடுதல் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த அனைத்து மனுக்களும்இ நீதிபதி எம்.எம்.சுந்தரேஷ் தலைமையிலான அமர்வில், இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள், இந்த மனுக்களை வரி தொடர்பான வழக்குகளை விசாரிக்கும் மேல் முறையீட்டு அமர்விற்கு மாற்ற பதிவுத்துறைக்கு உத்தரவிட்டனர். இந்த உத்தரவைத் தொடர்ந்து நீதிபதிகள் துரைசாமி மற்றும் ஹேமலதா ஆகியோர் அடங்கிய அமர்வில் நடிகர் விஜய் மனு விரைவில் விசாரணைக்கு வரும் எனத் தெரிகிறது.

# செப் 12ல் நீட் தேர்வு: மத்தியக் கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் அறிவிப்பு!



2021 ஆம் ஆண்டுக்கான நீட் தேர்வு செப்டம்பர் 12 ம் தேதி நடத்தப்படும் என்று மத்தியக் கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் அறிவித்துள்ளார்.நாளை மாலை முதல் இதற்கான விண்ணப்பப் பதிவு தொடங்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.எம்பிபிஎஸ், பிடிஎஸ், சித்தா, ஆயுர்வேதா, யுனானி, ஓமியோபதி உட்பட இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கு தேசியத் தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு (நீட்)) அடிப்படையில் மாணவர் சேர்க்கை நடத்தப்படுகிறது. ஆண்டுதோறும் மே முதல் வாரத்தில் தேசியத் தேர்வுகள் முகமை (என்டிஏ)) சார்பில் இந்தத் தேர்வு நடத்தப்படுகிறது. இதற்கிடையே, கரோனா பரவலால் கடந்த ஆண்டு நீட் தேர்வு பலமுறை ஒத்திவைக்கப்பட்டு பின்னர் செப்13 ம் தேதி நடத்தப்பட்டது. இந்த ஆண்டு ஆகஸ்ட் 1ம் தேதி நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்த நீட் நுழைவுத் தேர்வு ஒத்திவைக்கப்பட்டது. எனினும், அதுகுறித்து அரசு எந்தத் தகவலையும் வெளியிடவில்லை. இதற்காக மே 1 ம் தேதி தொடங்கப்பட வேண்டியிருந்த முன்பதிவும் தொடங்கப்படவில்லை. நாட்டில் கரோனா வைரஸ் 2 வது அலை ஏப்ரல், மே மாதங்களில் உச்சத்தை அடைந்த நிலையில் நாள்தோறும் 2 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டனர். தினந்தோறும் 3 லட்சம் பேர் வரை கரோனாவால் பாதிக்கப்பட்டனர். கரோனா வைரஸ் பரவல் தீவிரமடைந்ததைத் தொடர்ந்து சிபிஎஸ்இ 10,12 ம் வகுப்புத் தேர்வுகள் ஏற்கெனவே ரத்து செய்யப்பட்டன. சிஐஎஸ்சிஇ வாரியமும் 10ம் மற்றும் 12ம் வகுப்புத் தேர்வுகளை ரத்து செய்தது. இதனால் நீட் தேர்வு ரத்து செய்யப்படுமா என்று கேள்வி எழுந்தது. இதற்கிடையே தேர்வு குறித்த அறிவிப்பை விரைந்து வெளியிட வேண்டும் என்று மாணவர்களும், பெற்றோர்களும் மத்திய அரசை வலியுறுத்தினர். இந்நிலையில் 2021 ஆம் ஆண்டுக்கான நீட் தேர்வு செப்டம்பர் 12 ம் தேதி நடத்தப்படும் என்று மத்தியக் கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் அறிவித்துள்ளார். இதுகுறித்து அமைச்சர் தர்மேந்திர பிரதான் இன்று வெளியிட்டுள்ள ட்விட்டர் பதிவில், 2021 ஆம் ஆண்டுக்கான நீட் தேர்வு செப்டம்பர் 12 ம் தேதி கோவிட் 19 விதிமுறைகளைப் பின்பற்றி நடத்தப்படும்.இதற்கான விண்ணப்பப் பதிவு ஜூலை 13 மாலை முதல் ஜ ீவவிள:ஃஃவெயநெநவ. ஐஷ்உ . ஷ்ஐஃ என்ற இணையதளத்தில் தொடங்கும் என்று தெரிவித்துள்ளார்.முன்னதாக 2021 ம் ஆண்டுக்கான நீட் தேர்வு செப்டம்பர் 5 ம் தேதி நடத்தப்படும் என்றும், பேனா, காகித முறையில் இந்தி, ஆங்கிலம் உள்ளிட்ட 11 மொழிகளில் தேர்வு நடைபெறும் என்றும், தேசியத் தேர்வு முகமை அறிவித்துள்ளதாக சமூக ஊடகங்களில் தகவல் வெளியானது. ஆனால், அதற்கு தேசியத் தேர்வுகள் முகமை மறுப்பு தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.

# தமிழில் பொறுப்பேற்றுக்கொண்ட விஜய் வசந்த் எம்.பி!



இந்திய நாடாளுமன்றத்தின் மழைக்கால கூட்டத்தொடர் நேற்று தொடங்கியது. இதனையடுத்து இடைத்தேர்தல்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்டனர். அதன்பிறகு புதிதாகப் பதவியேற்றுக் கொண்ட அமைச்சர்களைப் பிரதமர் மோடி, அறிமுகம் செய்து வைக்க முயன்றபோது எதிர்க்கட்சிகள் தொடர் அமளியில் ஈடுபட்டனர். இதனையடுத்து மக்களவை மதியம் இரண்டு மணி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இந்த வருடம் மறைந்த மாநிலங்களவை எம்.பிக்களுக்கும், ஆளுமைக்கும் மாநிலங்களவை உறுப்பினர்கள் மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது. பிறகு அவர்களுக்கு மரியாதை செலுத்தும் விதமாக மாநிலங்களவை ஒரு மணிநேரம் ஒத்திவைக்கப்பட்டு, பின்னர் தொடங்கியது. இந்நிலையில், பதவியேற்பு நிகழ்வின் போது, மக்களவை இடைத்தேர்தலில் வெற்றிபெற்ற விஜய் வசந்த் எம்.பி —ஆக பொறுப்பேற்றுக்கொண்டார். நேற்று துவங்கிய மழைக்கால கூட்டத்தொடரில் அவர் கன்னியாகுமரி நாடாளுமன்ற உறுப்பினராக தமிழில் பொறுப்பேற்றுக்கொண்டார். மேலும், பதவியேற்றபின் பெருந்தலைவர் காமராஜரின் புகழ் வாழ்க, ராஜீவ் காந்தி வாழ்க, என்று கூறினார்.

# பொதுமக்களிடம் நேரடியாக மனுக்களை பெறுகிறார் முதலமைச்சர் மு. க. ஸ்டாலின்



மேகதாதுவில் அணைக்கட்ட கர்நாடக அரசு முயற்சித்து வரும் நிலையில், அதற்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழக அனைத்து சட்டமன்றக் கட்சிக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை மத்திய ஜல் சக்தித்துறைஅமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத்திடம் நேரில் ஒப்படைக்க அனைத்து சட்டமன்றக் கட்சித் தலைவர்கள் குழு டெல்லி சென்றது. இந்த குழுவின் தலைவரான தமிழக நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் ஏற்கனவே டெல்லி சென்றுள்ள நிலையில், குழுவில் இடம்பெற்றுள்ள தி.மு.க.வின் அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அதிமுக முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார், காங்கிரஸின் ஊடகப் பிரிவு தலைவர் கோபண்ணா மதிமுக பொதுச் செயலாளர் வைகோ எம்.பி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் எம்.பி, பா.ம.க தலைவர் ஜி.கே.மணி எம்.எல்.ஏ, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில பொதுக்குழு உறுப்பினர் பெரியசாமி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன், பா.ஜ.க, வின் சட்டப்பிரிவு தலைவர்—பால் கனகராஜ், மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் ஜவாஹிருல்லா, கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சின்ராஜ், தமிழக வாழ்வுரிமை கட்சியின் தலைவர் வேல்முருகன் எம்.எல்.ஏ புரட்சிப் பாரதம் கட்சி சார்பாக பூவை ஜெகன் மூர்த்தி ஆகியோர் சென்னையில் இருந்து விமானம் மூலம் டெல்லி புறப்பட்டு சென்றனர். மத்திய ஜல் சக்தித்துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத்தை, நேரில் சந்தித்து உள்ள இந்த குழுவினர் மேகதாது அணை விவகாரம் குறித்து வலியுறுத்தினர்.




# மூன்றாம் அலை வந்தாலும்கூட மக்களைக் காப்பாற்ற அரசு தயார்: அமைச்சர் மா. சுப்பிரமணியன்



சென்னையில் இருக்கின்ற பெரிய மருத்துவமனைகளைத் தவிர்த்து, 100 படுக்கைகளுடன் செயல்பட்டு வருகின்ற மருத்துவமனைகளும் முழுவதுமாக ஆக்ஸிஜன் வசதியுடன் அமைக்கப்பட்டுள்ளது. மூன்றாம் அலை வந்தாலும்கூட மக்களைக் காப்பாற்ற அரசு தயார் நிலையில் உள்ளது என மக்கள் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார். முன்னதாக நேற்று, கே.கே. நகரில் உள்ள அரசு ஈட்டுறுதி மருத்துவமனையில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் முழு கவச உடை அணிந்து கரோனா நோயாளிகளை நேரில் சந்தித்து நலம் விசாரித்து,அவர்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சைகள் குறித்து கேட்டறிந்தார். ரசு புறநகர் மருத்துவமனையில் அமைக்கப்பட்டுள்ள ஆக்சிஜன் பிளான்ட்டையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

GoLAAH TRAVELS
முன்பதிவிற்கு
9490547783
8870884969
கார் வாங்க/ விற்க வேண்டுமா?.
இப்போது 50-க்கும் மேற்பட்ட கார்கள் உடனுக்குடன்!
எங்களிடம் 24 நேரமும் கார் வாடகைக்கு மிகக்குறைந்த விலையில்
அகர முதல டிஜிட்டல் பிரிண்டர்ஸ்
Aagaramuthalaa
தொடர்புக்கு 9597887847 / 8870884969

அகர முதல
மின்னிதழ்
Aagaramuthalaa
www.Aagaramuthalaa.com

விளம்பர தொடர்புக்கு
9597887847 / 8870884969



# மயிலாடுதுறை மாவட்ட செய்திகள்

## சுருக்குமடி வலையை அனுமதிக்ககோரி தொடர் போராட்டம்




மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி தாலுக்கா சந்திரபாடி கிராம மீனவர்கள் தொடர் உண்ணாவிரதத்தில் 3 நாளாக சந்திர பாடியில் மீனவ கிராம மக்கள் ஆதார் அட்டைகள் மற்றும் குடும்ப அட்டைகளை வட்டாட்சியர் அலுவலகத்திற்கு நடைபயணமாக ஐந்து கிலோமீட்டர் தூரம் எடுத்து வந்து மத்திய மாநில அரசுகளை கண்டித்து குடியுரிமை ஒப்படைக்கும் போராட்டம் நடைபெற்றது. மீன்பிடி ஒழுங்கு முறை சட்டம் படி தமிழக அரசால் தடை செய்யப்பட்டுள்ள 21 வகையான வலைகளை தடை செய்யாமல் சுருக்குமடி வலையை மட்டும் தடை செய்துள்ளதாகவும். தடைசெய்யப்பட்ட வலைகளை பயன்படுத்தி மீன் பிடிக்கும் மற்ற மீனவர்களுக்கு அரசு அனுமதித்து வருவதாகவும் எனவே, சுருக்கு மடி மீனவர்களையும் கடலுக்குச் செல்ல அனுமதிக்க வேண்டும் என மீனவர்கள் இரண்டு நாட்களாக உண்ணா விருத போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதைத் தொடர்ந்து இன்று மூன்றாவது நாளாக சந்தரபாடியிலிருந்து வட்டாட்சியர் அலுவலகம் வரை ஐந்து கிலோமீட்டர் 1000க்கும் மேற்பட்டோர் நடை பயண பேரணியாக வந்து வட்டாட்சியர் அலுவலகம் முன்பு அமர்ந்து ஆதார் அட்டைகள் மற்றும் குடும்ப அட்டைகளை திரும்பப் பெற வேண்டும் என்று தரையில் அமர்ந்து அவர்கள் எடுத்துவந்த ஆதார் கார்டுகள் மற்றும் குடும்ப அட்டைகளை சாலையில் கொட்டி போராட்டம் நடத்தினர். மேலும் அவர்கள் கூறும்போது எங்களுக்கு வாழவே வழியில்லாத போது எங்களுக்கு ஏன் இந்த ஆதார் அட்டை மற்றும் குடும்ப அட்டை என்று கூறினர்.

அதைத்தொடர்ந்து மீனவ கிராம மக்கள் தரங்கம்பாடி வட்டாட்சியர் ஹரிதரன் ஆதார் அட்டைகள் 2500 மற்றும் குடும்ப அட்டைகள் 650 ஒப்படைத்தனர். மேலும் அவர்கள் வழங்கும் போது எங்களது குடும்ப நிலையின் காரணமாக குடியுரிமையை உங்களிடம் ஒப்படைத்து உள்ளம் எங்கள் வாழ்வாதாரம் உங்களிடத்தில் என்று கூறினர். மேலும் அரசு எங்களது கோரிக்கைகளான சுருக்குமடி வலையை பயன்படுத்த அனுமதி வழங்க வேண்டும் இல்லை என்றால் எங்களது ஆதார் அட்டைகள் மற்றும் குடும்ப அட்டைகளை திரும்ப பெறவேண்டும் என்று காவல்துறையினரிடம் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.

## மயிலாடுதுறையில் கர்நாடக அரசை கண்டித்து விவசாயிகள் ஆர்ப்பாட்டம்




காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாது என்ற இடத்தில் கர்நாடகா அரசானது சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் ஒப்புதல் பெறாமல் அணை கட்டுவதற்கான பணிகளை தொடங்கி உள்ளது. இந்நிலையில் அனைத்து கட்சியினர் டெல்லி சென்று அணை கட்டுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து வரும் நிலையில். இதனை கண்டித்து மயிலாடுதுறையில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தினர் மற்றும் அகில இந்திய விவசாய தொழிற்சங்கத்தினர் இணைந்து கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். நகரின் முக்கிய வீதிகள் வழியாக மத்திய அரசுக்கு எதிராக கண்டன கோஷங்களை எழுப்பியபடி பேரணியாக வந்தனர். பின்னர் பழைய பேருந்து நிலையம் அருகில் உள்ள தலைமை தபால் நிலையம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மேலும் மேகதாது அணை கட்டும் விவகாரத்தில் கர்நாடக அரசுக்கு துணை போகும் ஒன்றிய அரசை கண்டித்து முழக்கங்களை எழுப்பினர். இதில் நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு மேகதாது அணை கட்டுவதற்கு எதிராக தங்களது எதிர்ப்பினை தெரிவித்தனர்.

## மயிலாடுதுறையில் மனித உரிமைப் போராளி ஸ்டேன் சுவாமிக்கு வீரவணக்க அஞ்சலி




மயிலாடுதுறை புனித சவேரியார் ஆலயத்தில் வாழ்நாள் முழுவதும் பழங்குடியின மக்களின் உரிமைக்காக அர்ப்பணித்த மனித உரிமைப் போராளி மறைந்த அருட்தந்தை ஸ்டேன் சுவாமிக்கு வீரவணக்க அஞ்சலி நடைபெற்றது. மறைவட்ட அதிபர் பங்குத்தந்தை ஆரோக்கியதாஸ் அடிகளார் தலைமை வகித்தார். உதவி பங்குத்தந்தை கஸ்மீர்ராஜ் அடிகளார், அல்ஹாஜ் முகம்மது சித்திக், தூய இதய மரியன்னை சபையின் மயிலாடுதுறை இல்ல தலைமை அருட்சகோதரி சிப்ரியான், திமுக நகர செயலாளர் செல்வராஜ், அமல அன்னையின் சலேசிய மறைபரப்பு சபையின் மயிலை இல்லத் தலைமை அருட்சகோதரி கிரேசி, திரு இருதய சகோதரர்கள் இல்லத்தலைவர் அருட்சகோதரர் டேவிட்ராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் ராஜகுமார் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக்காக போராடி உயிர் நீத்த ஸ்டேன் சுவாமியின் போராட்ட பயணங்களையும், அவர் எதிர்கொண்ட சவால்களையும் எடுத்துக்கூறி புகழஞ்சலி செலுத்தினார். தொடர்ந்து ஆலய வளாகத்தில் அமைதிப் பேரணி நடைபெற்றது. இதில் கத்தோலிக்க கிறிஸ்தவர்கள், சமூக ஆர்வலர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கைகளில் மெழுகுதிரி ஏந்தி, வீரவணக்க முழக்கமிட்டு அஞ்சலி செலுத்தினர். பேரணியின் முடிவில் மனித உரிமைப் போராளி ஸ்டேன் சுவாமியின் படத்திற்கு அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், சட்டமன்ற உறுப்பினர், இறைமக்கள் உள்ளிட்டோர் மலர்தூவி அஞ்சலி செலுத்தினர்.

## மயிலாடுதுறை அருகே சிறுமிகளுக்கு ஆபாச படங்களை காட்டி பாலியல் தொந்தரவு செய்த பாஜக நிர்வாகி போக்சோவில் கைது.!




மயிலாடுதுறை அருகே சிறுமிகளுக்கு செல்போனில் ஆபாச படங்களை காண்பித்து பாலியல் தொந்தரவு செய்ததாக பாஜக நிர்வாகி போக்சோ சட்டத்தில் கைது செய்யப்பட்டுள்ளார். குத்தாலம் அருகே கோழிகுத்தி கிராமத்தை சேர்ந்த மகாலிங்கம் என்பவர் மயிலாடுதுறை தெற்கு ஒன்றிய பாஜக செயலாளர் பொறுப்பில் இருக்கிறார். 60 வயதுடைய இவர், அந்த கிராமத்தை சேர்ந்த 4 சிறுமிகளிடம் தனது செல்போனில் உள்ள ஆபாச படங்களை காண்பித்து தகாத முறையில் நடந்து கொண்டதாகவும், பாலியல் சீண்டல்களில் ஈடுபட்டதாகவும் கூறப்படுகிறது. இதுகுறித்து சிறுமியின் பெற்றோர் மயிலாடுதுறை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தனர்.இதன்பேரில் மகாலிங்கத்தை கைது செய்த போலீசார், குழந்தைகள் வன்கொடுமை தடுப்பு சட்டம், கொலை மிரட்டல் உள்ளிட்ட 3 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்துள்ளனர். இது தொடர்பாக போலீசார் தொடர்ந்து விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். சமீப காலமாக சிறுமிகள் மீதான வன்கொடுமை புகார் அதிகரித்து வருகிறது. பலரும் சிறுமிகளை குறிவைத்தே குற்றத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இது போன்ற குற்ற சம்பவங்களில் ஈடுபடுபவர்களுக்கு அதிகபட்ச தண்டணையை வழங்கினால் மட்டுமே குற்றத்தை தடுக்க முடியும் என சமூக ஆர்வலர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

அகர முதல
தொடர்புக்கு
9597887847
8870884969
Aagaramuthalaa
aagaramuthalaa@gmail.com
டிஜிட்டல் பிரிண்டர்ஸ், பத்திரிக்கை, இலக்கிய பேரவை, கல்விக் குழு

## 18 வயது நிறைவடைந்த பெண் குழந்தைகள் முதிர்வு தொகை பெற ஆவணங்களை சமர்பிக்கலாம்

## மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் லலிதா தகவல்!




முதல்—அமைச்சர் பெண் குழந்தை பாதுகாப்பு திட்டத்தின் கீழ் பதிவு செய்து 18 வயது நிறைவடைந்த பெண் குழந்தைகள் முதிர்வு தொகை பெற ஆவணங்களை சமர்பிக்கலாம் என்று கலெக்டர் லலிதா தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் விடுத்துள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது, தமிழக அரசின் முதல்—அமைச்சர் பெண் குழந்தை பாதுகாப்பு திட்டத்தின் கீழ் விண்ணப்பம் செய்து பெற்ற வைப்பு தொகை பத்திரத்தினை தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் மேம்பாட்டு கழகம் என்றநிறுவனத்திற்கு முதிர்வு தொகை பெற்று வழங்குவதற்கு அனுப்பிட 18வயது நிரம்பிய பெண் குழந்தைகள் மற்றும் அவரின் தாய் பெண் குழந்தையின் கீழ்கண்ட ஆவணங்களை நாகை மாவட்ட சமூகநல அலுவலகத்தில் நேரில் சமர்ப்பிக்க வேண்டும். அதன் பின்னர் தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் மேம்பாட்டு கழகத்திற்கு கருத்துரு அனுப்பப்பட்டு, முதிர்வு தொகை பெண் குழந்தையின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்படும்.வைப்புத் தொகை பத்திரத்தின் நகல், பிறப்பு சான்றிதழ் நகல், 10ம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் நகல், ஆதார் அட்டை நகல், வங்கி கணக்கு புத்தகத்தின் நகல், புகைப்படம்—2 ஆகியவற்றை மாவட்ட சமூகநல அலுவலகம், அரசு நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகம், நீலா தெற்கு வீதி, நாகப்பட்டினம் என்ற முகவரியில் உள்ள சமூக நல அலுவலகத்தில் நேரில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## மயிலாடுதுறையில் அமமுக ஆலோசனை கூட்டம்..!



மயிலாடுதுறை மாவட்ட அம்மா மக்கள் முன்னேற்ற கழக நிர்வாகிகளின் உள்ளாட்சித் தேர்தலுக்கான ஆலோசனை கூட்டம் மயிலாடுதுறை அட்மாஸ் திருமண மஹாலில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. அம்மா மக்கள் முன்னேற்ற கழக துணைப் பொதுச் செயலாளர் ரங்கசாமி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் மாநில இளைஞர் அணி செயலாளர் கோமல் அன்பரசன், மாவட்ட கழக செயலாளர் பாரிவள்ளல், கழக அமைப்புச் செயலாளர், பொன்.தா.மனோகரன், கழக விவசாயப் பிரிவு துணைச் செயலாளர் ராஜு, நகர பொறுப்பாளர் சக்தி கண்ணன் மற்றும் ஒன்றிய கழக நகர கழக பேரூராட்சி செயலாளர்கள் பங்கேற்று பேசினர். உள்ளாட்சித் தேர்தலில் போட்டியிடுவது குறித்தும்இ விரைவில் தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ள தியாகத் தலைவி சசிகலா அவர்களுக்கு வரவேற்பு அளிப்பது குறித்தும், கழக உறுப்பினர் சேர்க்கை குறித்தும் ஆலோசனைகள் செய்யப்பட்டன. ஆயிரத்திற்கு மேற்பட்ட கட்சி நிர்வாகிகள் தொண்டர்கள் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

## 2 கிலோ கஞ்சா பறிமுதல்: வாலிபர் கைது



மணல்மேடு பட்டவர்த்தி பாலம் அருகில் உள்ள திடலில் கஞ்சா விற்பனை நடைபெறுவதாக மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு அலுவலகத்திற்கு ரகசிய தகவல் கிடைத்தது. அதன் பேரில் மயிலாடுதுறை மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு சுகுணாசிங் உத்தரவின்பேரில் தனிப்படை சப்—இன்ஸ்பெக்டர் இளையராஜா தலைமையில் சிறப்பு சப்—இன்ஸ்பெக்டர் ரமேஷ் மற்றும் நரசிம்மபாரதிஇ அசோக்குமார் கார்த்தி உள்ளிட்ட போலீசார் கஞ்சா வாங்க செல்வது போன்று சென்று அங்கு கஞ்சா விற்பனையில் ஈடுபட்டிருந்த நபரை சுற்றிவளைத்து பிடித்து விசாரணை செய்தனர். 2 கிலோ கஞ்சா பறிமுதல்—வாலிபர் கைது விசாரணையில் அவர் இளந்தோப்பு மெயின்ரோட்டை சேர்ந்த குமார் மகன் கோகுல்பிரசாத் (வயது21) என்பதும், அவர் வீட்டில் கஞ்சாவை பதுக்கி வைத்து கொஞ்சம் கொஞ்சமாக கொண்டு சென்று திடலில் வைத்து விற்பனை செய்ததும் தெரியவந்தது. இதையடுத்து அவரது வீட்டிற்கு சென்று போலீசார் சோதனை செய்தனர். அப்போது அங்கு பதுக்கி வைத்திருந்த 2 கிலோ கஞ்சாவை பறிமுதல் செய்தனர். இதையடுத்து கஞ்சா விற்பனையில் ஈடுபட்டு வந்த கோகுல்பிரசாத் மணல்மேடு போலீசில் ஒப்படைக்கப்பட்டார். இதையடுத்து மணல்மேடு போலீசார் வழக்குப்பதிவு செய்து கோகுல்பிரசாத்தை கைது செய்தனர்.

## திருக்கடையூர் அபிராமி அம்மன்கோவிலில் கும்பாபிஷேக திருப்பணி பந்தக்கால் நடும் விழா!





மயிலாடுதுறை மாவட்டம் திருக்கடையூரில் புகழ்பெற்ற அபிராமி அம்மன் சமேத அமிர்த கடேஸ்வரர் ஆலயமும் அமைந்துள்ளது. பக்த மார்க்கண்டேயனுக்காக எமனை இறைவன் சம்காரம் செய்த இந்த ஆலயத்தில் வழிபாடு செய்வதே எமபயம் நீக்கும் ஆயுளை வளர்க்கும் என்பதால் தினமும் 60,80 ஆகிய வயதுகளில் செய்யப்படும் சஷ்டியப்த பூர்த்தி சதாபிஷேகம் ஆகிய திருமணங்கள் புகழ்பெற்ற ஒன்றாகும். தருமபுரம் ஆதினத்திற்கு சொந்தமான அமிர்தகடேஸ்வரர் கோவிலின் கும்பாபிஷேக விழாவிற்கான திருப்பணிகள் துவங்குகின்றன இதனை முன்னிட்டு பந்தல் கால் முகூர்த்த விழா வெள்ளிக்கிழமை தருமபுர ஆதினம் 27 வது மடாதிபதி குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக பரமாச்சாரிய சாமிகள் முன்னிலையில் பந்தக்கால் நடும் விழா நடைபெற்றது. அதனைத்தொடர்ந்து உலக மக்கள் நன்மைக்காக கொரோனா நோய் தொற்றிலிருந்து முழுவதும் விடுபடுவதற்காக திருக்கடையூர் அமிர்தகடேஸ்வரர் சன்னதியில்அஸ்திர யாக பூஜை செய்து மகா தீபாராதனை காண்பிக்கப்பட்டது. பின்னர் அமிர்தகடேஸ்வரர் சாமி அபிராமி அம்பாள் ஆகிய சாமிகளுக்கு சிறப்பு அபிஷேக அலங்கார ஆராதனை நடைப்பெற்றது. நிகழ்ச்சியில் தொண்டை மண்டலத்தின் 233 வது பட்டம் ஸ்ரீலஸ்ரீ திருச்சிற்றம்பல தேசிக ஞானப்பிரகாச பரமாச்சாரிய சுவாமிகள், தருமபுர ஆதீன கட்டளை தம்பிரான் சுவாமிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## செம்பனார்கோவில் எரிந்த நிலையில் சடலமாக கிடந்த வேளாண் கூட்டுறவு சங்க செயலாளர்






மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோவில் பகுதியைச் சேர்ந்தவர் அறிவுடைநம்பி (58)இவர் அதே பகுதியில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தின் செயலாளராக பணியாற்றி வருகிறார். இந்நிலையில்அன்று காலை தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கத்திற்கான கூடுதல் கட்ட கட்டுமான பணிகளை பார்வையிட அறிவுடைநம்பி சென்றுள்ளார். பின்னர் வெகு நேரமாகியும் வீடு திரும்பவில்லை. இந்நிலையில் அலுவலகத்திற்கு வந்த ஊழியர்கள், கட்டுமான பணி நடைபெறும்இடத்தில் வாயில் துணியை வைத்து அடைத்தபடி எரிந்த நிலையில் அறிவுடைநம்பி சடலமாக கிடப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்தனர். இதுகுறித்த தகவலின் பேரில் மயிலாடுதுறை டிஎஸ்பி வசந்தராஜ் தலைமையில் செம்பனார்கோவில் போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.இதைத்தொடர்ந்து அங்குள்ள கண்காணிப்பு கேமராவில் அறிவுடைநம்பி கையில் பெட்ரோல் கேனுடன் செல்வது பதிவாகியிருந்தது. வாயில் துணி அடைக்கப்பட்ட நிலையில் எரிந்து கிடப்பதால் கொலையா தற்கொலை செய்து கொண்டாரா என குடும்பத்தினர் மற்றும் தொடக்க வேளாண் கூட்டுறவு சங்க அதிகாரிகளிடம் போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டுள்ளனர். தடயங்கள் சேகரிக்கப்பட்டு, உடலை பிரேத பரிசோதனைக்காக மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி உள்ளனர். இச்சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

விளம்பர தொடர்புக்கு
9597887847
8870884969

## மயிலாடுதுறை அருகே போக்சோ சட்டத்தில் கைதான பாஜக பிரமுகரின் மகன்கள் புகார் கொடுத்தவரை கத்திகுத்து.



குத்தாலம் காவல் சரகத்திற்கு உட்பட்ட பகுதியில் கடந்த 11 ஆம் தேதி 5 க்கும் மேற்பட்ட சிறுமிகளுக்கு ஆபாச படம் காண்பித்து பாலியல் சீண்டலில் ஈடுபட்டதாக பாதிக்கப்பட்ட சிறுமிகளின் பெற்றோர் அளித்த புகாரின் பேரில் பாஜகவின் தெற்கு ஒன்றிய செயலாளர் மகாலிங்கம் (60) போக்சோ சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். மேலும் இது தொடர்பாக நீதிமன்றத்தில் விசாரணைக்காக புகார் அளித்த பெற்றோர் பாண்டியராஜன் சென்றுள்ளார். பின்பு மகாலிங்கம் மீது புகார் கொடுத்ததற்காக மகாலிங்கம் குடும்பத்தினர் தொடர்ந்து கொலை மிரட்டல் விடுத்து வருவதாக மயிலாடுதுறை காவல் நிலையத்தில் புகார் அளிக்க சென்றுள்ளார். அவர் வசித்துவந்த பகுதி குத்தாலம் காவல் சரகத்திற்கு உட்பட்டது என்பதால் புகாரினை குத்தாலம் காவல் நிலையத்தில் அளிக்கும்படி போலீசார் கூறியுள்ளனர். இந்நிலையில் வியாழக்கிழமை இரவு தனது வீட்டிற்கு சென்று கொண்டிருந்த பாண்டியராஜன் மீது மறைவாக நின்று கொண்டிருந்த மகாலிங்கத்தின் மகன்களான ஜவகர் மற்றும் சுதாகர் 10 க்கும் மேற்பட்டோருடன் இணைந்து பாண்டியராஜனை கத்தியால் குத்தி சரமாரியாக தாக்கியுள்ளனர். மேலும் தடுக்கச் சென்ற சத்யராஜ் என்பவரையும் கத்தியால் குத்தி தாக்கியுள்ளனர். மேலும் சிலரை கட்டையால் அடித்து அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர். உடனடியாக மயிலாடுதுறை அரசு பெரியார் மருத்துவமனையில் காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். மேலும் சம்பவ இடத்திற்கு வந்த போலீசார் ஜவஹரை அங்கிருந்து விசாரணைக்காக அழைத்துச் சென்றுள்ளனர். தொடர்ந்து இச்சம்பவம் குறித்து போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். பாஜக பிரமுகர் மீது புகார் கொடுத்ததற்காக சரமாரியாக கத்தியால் குத்தி தாக்கிய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

RNI No: 2019098444
அகர முதல
www.Aagaramuthalaa.com 20.07.2021

## செம்பனார்கோவில் ஷைன் லயன்ஸ் சங்கம்

# புதிய நிர்வாகிகள் பதவியேற்பு விழா



மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோவில் ஷைன் லயன்ஸ் சங்கம் புதிய நிர்வாகிகள் பதவி ஏற்பு விழா ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்றது. பன்னாட்டு லயன்ஸ் சங்க மாவட்ட தலைவர் பழனிவேந்தன் தலைமை வகித்தார் சாசன தலைவர் நந்தகுமார் நெறியாளர் கார்த்திகேயன் முன்னாள் மாவட்ட ஆளுநர் சுரேஷ் மாவட்டத் தலைவர் மகேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.இவ்விழாவில் நாகை வடக்கு மாவட்ட திமுக பொறுப்பாளரும் பூம்புகார் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா முருகன் கலந்துகொண்டு செம்பனார்கோவில் ஷைன் லயன்ஸ் சங்க புதிய நிர்வாகிகள் தலைவர் சாம்ராட் டாக்டர் லயன் கே. பாலையா செயலாளர் தனராஜ் பொருளாளர் சதீஷ் உள்ளிட்ட உறுப்பினர்களை பாராட்டி வாழ்த்துக் கூறி பேசினார் ஏழை எளிய மக்களுக்கு நலதிட்ட உதவிகள் மற்றும் அரிசி காய்கறி உள்ளிட்ட நிவாரணப் பொருட்களை வழங்கி கொரோனா நோய்த்தொற்று பரவலைத் தடுப்பதற்கு தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டும் என்று விழிப்புணர்வு மக்களிடையே அவசியம் குடும்பத்தில் உள்ள அனைவரும் தடுப்பூசி போட வேண்டும் என்றும் அவர் கூறினார்கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சித்திக் நாகை வடக்கு மாவட்ட திமுக துணை செயலாளர் ஞானவேலன் திமுக தெற்கு செயலாளர் அப்துல்மாலிக் ஒன்றிய குழு தலைவர் நந்தினி ஸ்ரீதர் மற்றும் லயன்ஸ் சங்க உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்

## மயிலாடுதுறை அருகே பைக்கில் ஆற்று மணல் கடத்தி

# விற்பனை செய்து வந்த கும்பல் கைது







மயிலாடுதுறை மாவட்டம் மணல்மேட்டை அடுத்த கொள்ளிடம் ஆற்றில் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக அரசு மணற்குவாரிகள் அமைத்து ஆற்று மணல் அள்ளப்பட்டு விற்பனை நடைபெற்று வருகிறது. இந்நிலையில் தற்போது மணல்குவாரிகள் செயல்படாததால் ஆற்று மணலுக்கு கடும் தட்டுப்பாடு நிலவி வருகிறது. இந்த சூழலில், இப்பகுதியில் இரவு வேளையில் லாரிகள், டிராக்டர்கள் மற்றும் மாட்டு வண்டிகளிலும் மணல் கடத்தப்படுவது தொடர் கதையாக இருந்து வந்த நிலையில் காவல்துறையினரின் கெடுபிடியால் அதுவும் ஓரளவிற்கு கட்டுக்குள் உள்ளது. இருப்பினும் ஆற்று மணல் தான் கட்டுமானத்திற்கு சிறந்தது என சொல்லப்படுவதால் அதனை அதிக விலைக்கொடுத்தும் வாங்கி வீடுக்கட்ட பொதுமக்கள் பலரும் முனைப்பு காட்டுகின்றனர். இதனை சாதகமாக பயன்படுத்திக்கொண்டு, பணத்திற்காக கொள்ளிடக்கரையோரம் உள்ள இளைஞர்கள் நூதன முறையில் தங்களது இருசக்கர வாகனத்தில் மூலம் கொள்ளிடம் ஆற்றில் மணலைஅள்ளிச்சென்று திருட்டு தனமாக விற்பனை செய்துவருகின்றனர். தங்களது இருசக்கர வாகனத்தில் சிமெண்ட் சாக்குகள் மூலம், கொள்ளிடம் ஆற்றிலிருந்து மணலை திருடி விற்பனை செய்து ஈடுப்படுகின்றனர். 50 மணல் மூட்டை ஒரு யூனிட் என கணக்கிடப்பட்டு , ஒருமுறை இருசக்கர வாகனத்தில் 4 மூட்டைகள் வீதம் கடத்தி கொண்டு போய் உரியவரிடம் சேர்ப்பார்கள், இதுபோன்று 80 சாக்கு பைகளில் ஒரு யூனிட் மணல் கடத்தி 8 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்து வருகின்றனர். இதனிடையே மணல்மேடு காவல்துறையினருக்கு இதுகுறித்து கிடைத்த ரகசிய தகவலின் பேரில் மணல்மேடை அடுத்த விராலூர் பகுதியில் வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது அவ்வழியாக சிமெண்ட் சாக்குகளில் மூட்டையாக மணலை பைக்கில் ஏற்றி வந்த வாகணங்களை நிறுத்தி சோதனை செய்தனர் . சோதனையில் சிமெண்ட் சாக்குகளில் இளைஞர்கள் கொள்ளிடம் ஆற்றில் இருந்து மணலை கடத்தி வந்தது தெரியவந்தது. இதனையடுத்து மணல் கடத்தலில் ஈடுபட்ட 5 இளைஞர்களை கைது செய்து, மணல் கடத்த பயன்படுத்தப்பட்ட10 இருசக்கர வாகனங்களை பறிமுதல் செய்து இளைஞர்களை சிறையில் அடைத்தனர். இருசக்கர வாகணங்களில் யூனிட் கணக்கில் மணல் கடத்திய சம்பவம் மயிலாடுதுறை மாவட்டம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது . மேலும் இதுகுறித்து சமூக ஆர்வலர்கள் கூறுகையில் பல ஆண்டு காலமாக இப்பகுதிகளில் ஆற்றுமணல் கடத்துவதே தொடர்கதையாக இருந்து வருகிறது. அதுமட்டுமின்றி மணல் குவாரிகளுக்கு உரிமம் பெற்று அமைக்கப்படும் குவாரிகளும் அரசு விதிமுறைகளுக்கு மீறி அளவுக்கு அதிகமான ஆழத்திற்கு மணல் எடுப்பது தொடர்கதையாக இருந்து வருகிறது. இதனை தமிழ்நாடு அரசு கவனத்தில் எடுத்துக் கொண்டு மணல் கடத்தலை தடுக்கும் விதமாக அரசு குவாரிகளுக்கு மீண்டும் அனுமதி அளித்து , மணல் குவாரிகளை ஐஏஎஸ் அதிகாரி தலைமையிலான கண்காணிப்பு குழு அமைத்து கண்காணிக்க வேண்டும் என கருத்து தெரிவிக்கின்றனர்.

# மயிலாடுதுறை மாவட்ட அமெச்சூர் கபடி கழக புதிய நிர்வாகிகள் தேர்வு.!



மயிலாடுதுறை மாவட்ட அமெச்சூர் கபடி கழக புதிய நிர்வாகிகள் தேர்வு பொதுக்குழு கூட்டம் தரங்கம்பாடியில் சனிக்கிழமை நடைபெற்றது. கூட்டத்திற்கு விருதுநகர் மாவட்ட அமெச்சூர் கபடி கழக தலைவர் சுப்ரமணியராஜா, கரூர் மாவட்ட அமெச்சூர் கபடி கழக தலைவர் சேதுராமன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற பொதுக்குழு கூட்டத்தில் கூட்டத்தில்மயிலாடுதுறை மாவட்ட தலைவராக ரஜினி, செயலாளரக ஹான்றிஸ் , பொருளாளராக வெற்றிவேல் மற்றும் துணை தலைவர்கள், செயற்குழுஉறுப்பினர்கள், இணைச் செயலாளர்கள், தேர்வு கமிட்டிகள் உள்ளிட்ட நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர். மயிலாடுதுறை மாவட்ட கபடி சேம்பியன்சிப் போட்டி அமெச்சூர் கபடி குழு நிர்வாகிகள், கபடி அணி வீரர்கள், உடற்பயிற்சி ஆசிரியர்கள் , மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். நடத்துவது குறித்தும், கபடி அணியில் உள்ள அனைவருக்கும் வழங்குவது, தமிழ்நாட்டில் உள்ள அனைத்துத் துறைகளிலும் கபடி வீரர்களுக்கு வேலைவாய்ப்புகள் வழங்கிட முதல்வரை சந்தித்து கோரிக்கை மனு அளிப்பதாகவும் இக்கூட்டத்தில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. இக்கூட்டத்தில்


வேலைக்கு ஆட்கள் தேவை




9597887847/8870884969

